
*ISSN No. : XXXXXXXXX*

*அவையம் 1 (2017) p.no. 15 - 23*

SACRED HEART RESEARCH PUBLICATIONS

புதிய அவையம்



# ஆற்றுப்படைப் பாடல்களின் பின்புலம் - மதிப்பீடு

**முனைவர் ஆ. சந்திரன்**

**உதவிப் பேராசிரியர், தமிழ் முதுகலை & ஆய்வுத்துறை,**
**தூய நெஞ்சக் கல்லூரி, திருப்பத்தூர், வேலூர்-635 601.**

**கட்டுரை பெறப்பட்டது: *21.12.2016*** **ஏற்கப்பட்டது: *05.05.2017***

பத்துப்பாட்டு எட்டுத்தொகைப் பாடல்களில் இருந்து சற்று மாறுபட்டு விளங்குகின்றன. அதாவது, இப்பாடல்கள் எட்டுத்தொகைப் பாடல்களின் அடுத்த கட்ட வளர்ச்சியாக அமைந்துள்ளன. இங்கு வளர்ச்சி என்று குறிப்பிடுவது அதன் அளவைக் குறித்தது அன்று. அதன் உள்ளடக்கத்தைக் குறித்தது. இப்பாடல்களில் ஏற்பட்ட வளர்ச்சி எட்டுத்தொகைப் பாடல்களுக்கும் சிலம்பு முதலிய காப்பியங்களுக்கும் இடைப்பட்ட ஒன்றாக விளங்குகிறது[1].

எட்டுத்தொகைப் பாடல்கள் அகம், புறம், பாவகை, அளவு முதலியவற்றின் அடிப்படையில் தனித்தனியாகத் தொகுக்கப்பட்டுள்ளன. எட்டுத் தனித்தொகையாகத் தொகுக்கப்பட்டுள்ள பாடல்கள் பாடப்பட்ட அதே காலகட்டத்தில் பாடப்பட்ட அகம், புறம், ஆற்றுப்படை என்ற முரண்பட்ட தன்மையில் அமைந்த பாடல்கள் ஒரே தொகுப்பாக ஆக்கப்பட்டுள்ளன. அத்தொகுப்பிற்குப் பத்துப்பாட்டு என்று பெயரிடப்பட்டுள்ளது.

புது முயற்சியில் விளைந்த ஒன்றாக விளங்கும் இப்பத்துப் பாடல்களைத் தொகுத்தவர் யார்?

புதிய அவையம்

முரண்பட்ட பாடல்களை ஏன் ஒன்றாகத் தொகுத்தார்கள்? இத்தொகுப்பு உருவானது எப்போது? என்பன போன்ற வினாக்களுக்கு இன்னும் சரியான விடை காணப்படவில்லை. இப்பாடல்களின் தொகுப்புப் பற்றி நமக்கு முதலில் அறிமுகம் செய்பவர் பேராசிரியர் ஆவார். அவரது தொல்காப்பிய உரையில் உள்ள ‘பாட்டும் தொகையும்’ என்ற குறிப்பிலிருந்து இதை நாம் அறிகிறோம். உரையாசிரியர்களின் காலகட்டத்தில் அப்பாடல்கள் பலரின் வாசிப்புக்கு உட்பட்டிருக்கின்றன. முரண்பட்ட கருத்துக்கள் பல வெளியிடப்பட்டிருக்கின்றன. நச்சினார்க்கினியரின் பத்துப்பாட்டு விளக்கவுரையால் இதை அறியமுடிகிறது.

நச்சினார்க்கினியரின் விளக்க உரையுடன் இப்பாடல்களை உ.வே.சா. முதலில் பதிப்பித்தார். அவருடைய பதிப்பிற்குப் பின்னர் வெளியான பதிப்புகள் பெரும்பாலும் உ.வே.சா. பதிப்பில் உள்ளவாரே அமைந்துள்ளன. சோமசுந்தரனார் பத்துப்பாட்டுப் பதிப்பு மட்டும் சற்று மாறுபட்டு அமைந்துள்ளது. அப்பதிப்பில் பல இடங்களில் நச்சினார்க்கினியரின் கருத்தை அவர் மறுத்துள்ளார். அவை பெரும்பாலும் அகம் புறம் என்ற திணை சார்ந்தே அமைந்துள்ளன.

எஸ்.வையாபுரிப்பிள்ளை[2], நீலகண்ட சாஸ்திரி[3], க.கைலாசபதி[4], மா.இராசமாணிக்னார்[5], கார்த்திகேசு சிவத்தம்பி[6] போன்றோரின் வாசிப்பு இப்பாடல்களின் காலம் பற்றிய சிந்தனையை முன் வைக்கிறது. இத்தொகுப்பிலுள்ள திருமுருகாற்றுப்படை எஞ்சிய ஒன்பது பாடல்களுக்குப் பிறகு பாடப்பட்ட பாடல் என்ற புதிய சிந்தனையை இவர்களுடைய வாசிப்பு முன்வைக்கிறது. அத்துடன் பாட்டு - பத்துப்பாட்டு என்ற சொல் வழக்கில் உள்ள இடைவெளி உரையாசிரியர் காலத்திலிருந்தே இந்தச் சிந்தனை இருந்திருக்குமோ? என்ற ஐயத்தை ஏற்படுத்துகிறது.

எட்டுத்தொகைப் பாடல்களின் வளர்ச்சியாக உள்ள இத்தொகுப்பில் பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்டை, பெரும்பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை ஆகிய நான்கு பாடல்கள் ஆற்றுப்படைப் பாடல்களாக இருக்கின்றன. மதுரைக்காஞ்சி புறப்பாடலாகும்.

எஞ்சிய முல்லைப்பாட்டு, பட்டினப்பாலை, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு ஆகியன அகம் சார்ந்தவைகளாகும். புறப்பாடல்களின் ஒரு பகுதியாக விளங்கும் ஆற்றுப்படைப் பாடல்களின் பின்புலம் பற்றி விவாதத்தை எழுப்ப முயல்கிறது இக்கட்டுரை.

**ஆற்றுப்படை - அகப்புறப்பாடல்கள்**

ஆற்றுப்படை என்பது மன்னர்களின் சிறப்பு மற்றும் அவர்களுடைய நாட்டின் வளம் ஆகியவற்றை விளக்கப் புலவர்களால் கையாளப்பட்ட உத்தியாக அமைந்துள்ளது. தலைவன் தன் நெஞ்சுக்குக் கூறிச் செலவழுங்கியதாக அமைந்துள்ள பட்டினப்பாலையில் திருமாவளவன் சிறப்பு சோழ நாட்டின் வளம் ஆகியவற்றைப் பற்றிக் கூறுகின்றது. இது ஆற்றுப்படையைப் போன்றே அமைந்துள்ளது. அதாவது, இப்பாடலும் ஆற்றுப்படுத்துபவர் – ஆற்றுப்படுத்தப்படுபவர் - ஆற்றுப்படுத்தப்படும் பொருள் என்ற அமைப்பையே கொண்டுள்ளது. இவ்வாறே பத்துப்பாட்டிலுள்ள பிறபாடல்களும் அமைந்துள்ளன[7].

தமிழனின் கவிதை வளர்ச்சி பற்றிச் சிந்திக்கும் போது 'பத்துப்பாட்டில் பாதிக்கு மேல் ஆற்றுப்படைப் பாடல்களாக இருக்கக் காரணம் என்ன? என்ற வினா இயல்பாக எழுகிறது. இவ்வினாவைப் பற்றிச் சிந்திக்கும் போது இப்பாடல்களில் பாடப்பட்டுள்ள அரசர்கள் பற்றி நாம் பார்வையைச் செலுத்த வேண்டியுள்ளது. ஆற்றுப்படைப் பாடல்களில் கூறப்படும் அரசர்களில் சோழனைத் தவிர திரையன், நன்னன், நல்லியகோடன் ஆகியோர் சிற்றரசர்கள். அத்துடன் மூவேந்தர்களில் ஒருவரான சோழனின் நாட்டிற்கும் வேங்கடமலைக்கும் இடைப்பட்ட தொண்டை மண்டலத்தைச் சார்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பாண்டியர், சேரர் மீது ஆற்றுப்படுத்துவதாக ஒரு பாடலும் பத்துப்பாட்டில் பாடப்படவில்லை. சோழன் திருமாவளவனிடம் ஆற்றுப்படுத்துவதாகப் பாடப்பட்டுள்ள பாடலில் ஆற்றுப்படையின் முக்கிய அம்சமாக விளங்கும் வழி வருணனை இடம்பெறவில்லை. அடியவர்

இறையருள் வேண்டி முருகனிடம் ஆற்றுப்படுத்தப்படும் திருமுருகாற்றுப்படை பிற ஆற்றுப்படைப் பாடல்களின், குறிப்பாக சிறுபாணாற்றுப்படையின் சாயலைக் கொண்டு அமைந்துள்ளது. அத்துடன், இப்பாடல் பிற ஒன்பது பாடல்களின் கடவுள் வாழ்த்துப் பாடலாகக் கருதப்படுகிறது[8]. இந்தக் கருத்துக்களை எல்லாம் அலசிப் பார்க்கும் போது ஆற்றுப்படைப் பாடல்களில் பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை ஆகிய மூன்றும் தனித்துவம் வாய்ந்த பாடல்களாக அமைவதை அவதானிக்கலாம்.

### ஆற்றுப்படை- உத்தியா?

கூத்தர், பொருநர், பாணர், விறலி ஆகிய நால்வர் ஆற்றுப்படுத்த உரியவர் என்கிறது தொல்காப்பியம். இக்கூற்றின் படி பார்த்தால் திருமுருகாற்றுப்படை தவிர்த்த பிற நான்கு பாடல்களும் ஆற்றுப்படைப் பாடல்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. அப்படி ஏற்றுக்கொள்ளும் போது இவை ‘இரவலர்களை மன்னர்களிடம் ஆற்றுப்படுத்துவதாக அமையும் அமைப்பு’ வெறும் உத்தியாகப் புலவர்களால் கையாளப்பட்டதா? அல்லது அதைத் தாண்டி வேறு ஏதேனும் இப்பாடல்களின் ஊடாக இயங்குகிறதா? என்ற ஐயத்தை அது எழுப்பிவிடுகிறது.

> *“வருபுனல் வாயில் வஞ்சியும் வறிதே” (சிறுபாண்.50)*
>
> *“தமிழ் நிலை பெற்ற தாங்கு அரு மரபின்*
> *மகிழ்நனை மறுகின் மதுரையும் வறிதே” ( சிறுபாண்.66,67)*
>
> *“ஓடாப்பூட்கை உறந்தையும் வறிதே” (சிறுபாண்.83)*
>
> *“எழுவர்பூண்ட ஈகைச் செந்நுகம்” (சிறுபாண்.113)*

என்ற சிறுபாணாற்றுப்படையின் பாடல்வரிகள் மூவேந்தர்கள் பற்றியும் கடையேழு வள்ளல்கள் பற்றியும் குறிப்புகளைத் தருகின்றன. இப்பாடலின் 41-83 வரிகள் சேர சோழ பாண்டியர் மக்களைக் காக்கத்தவறினர் என்ற குறிப்பை முன் வைக்கிறது. அதைத் தொடர்ந்து 84-113 வரிகள் கடையேழு வள்ளல்கள் மக்களுக்குச் செய்த சேவையை - (ஈகையை) நல்லியக்கோடன் செய்து வருவதாகக் கூறுகிறது, இச்செய்திகளை இணைத்துப் பார்க்கும் போது மூவேந்தர்கள் செயலற்றுப் போனார்கள் என்ற கருத்தை இப்பாடல்

முன்வைப்பதை அறியமுடிகிறது. இப்பாடல் பாடப்பட்ட காலத்தில் மாங்குடி மருதனாரால் பாடப்பட்ட மதுரைக்காஞ்சியில் பாண்டியன்

> *“பாணர் வருக! பாட்டியர் வருக!*
> *யாணர்ப் புலவரொடு வயிரியர் வருக! என*
> *இருங்கிளைப் புரக்கும் இரவலர்க்கு எல்லாம்*
> *கொடுஞ்சி நெடுந்தேர் களிற்றொடு....” (மது.கா.748-752)*

வழங்கினான் என்று கூறுப்பட்டுள்ளது சிந்திக்க வேண்டிய ஒன்று. அத்துடன் அப்பாடலில்

> *“………………………. சேரிதொறும்*
> *உரையும் பாட்டும் ஆட்டும் விரை*
> *வேறு வேறு கம்பலை வெறிகொள்பு மயங்கிப்*
> *பேரிசை நன்னன் பெறும் பெயர் நன்னாள்*
> *சேரி விழவின் ஆர்ப்பு எழுந்தாங்கு*
> *முந்தை யாமம் ………*
> *(மது.கா.616-620)*

கழிந்தது என்று கூறுகிறது. மதுரை நகரின் சிறப்பை விளக்க ஒரு சிற்றரசனின் பிறந்த நாளில் இந்நாட்டின் சேரிப்பகுதி மக்கள் அடையும் மகிழ்ச்சியை வைத்து விளக்கவேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது என்பது பற்றிச் சிந்திக்கவேண்டியுள்ளது.

அத்துடன் பாண்டியனைப் பார்த்து, “மன்னா! உனக்கு நிகர் ஒருவரும் இல்லை” (மது.கா.206) என்று கூறும் புலவர், “உன்னுடைய அவலம் கெடுவதாக (மது.கா.208)” என வாழ்த்துகிறார். புலவர் கூறிய மன்னனின் அவலம் என்ன என்பது பற்றி உரையாசிரியர்களும் விளக்கம் அளிக்கவில்லை. அத்துடன் இத்தகைய செய்தி பெரும்பாணற்றுப்படையிலும் இடம்பெற்றுள்ளதைப் பார்க்க முடிகிறன்றது. “கெடுக நின் அவலம்” என்ற “இந்த வாக்கியம் வாய்ப்பாடாக பயன்படுத்தப்பட்டிருக்கலாம்[9]” என்ற சில ஆய்வாளர்களின் கருத்தை அப்படியே ஏற்றுக்கொள்ள முடியுமா? அது சரியாக இருக்குமா? என்ற சந்தேகம் வலுப்பெறுகிறது. அதே நேரம் மதுரைக்காஞ்சியின் பாடல் வரிகள் 766-782 எந்தப் பண்புகள் நிலையற்றவை எனக் கூறித் தவிர்க்கவேண்டும் என்று கூறியதோ அவற்றுடனே அவன் வாழவேண்டும் என்கிறது. “இக்கருத்து நிலை

இடர்ப்பாடு இப்பாடலில் காணப்பட்டாலும் புறத்திணையில் புகழப்படும் அடுபேர் நியமத்தை கைவிடுமாறு கோருகின்றது. இந்த அளவில் இந்தப் பாடல் புறத்திணை மரபில் எடுத்துக் கூறப்பட்டவற்றைக் கருத்துநிலையில் எதிர்ப்பதாகக் *(Ideologically opposed to cankam room)* காணப்படுகிறது. இந்த வகையில் மதுரைக்காஞ்சி ஒருகருத்து நிலை தளத்தைக் கோரி நிற்பதைக் காணலாம்[10]"

இவற்றிற்கெல்லாம் மேலாக மன்னனை வாழ்த்தும் புலவர் "இளங்கோசர், ஐம்பெருங்கேளிர் (அமைச்சர் முதலானவர்கள்), குறுநில மன்னர் உன் ஏவல் கேட்டு நடக்க நீ அறத்துடன் இன்பமாக வாழ்க! (மது.கா.772-782)" என்று கூறுகிறார்.

திருமாவளவன் மீது அகப்பாடல் அமைப்பிலான பட்டினப்பாலையைப் பாடும் கடியலூர் உருத்திரங்கண்ணனார் திரையன் மீது ஆற்றுப்படை உத்தியைக் கையாண்டுள்ளார். இரு வகையான இலக்கிய உத்தியைக் கொண்டதாக அதாவது அகம் - ஆற்றுப்படை என்று அமைந்துள்ள இவ்விரு பாடல்களும் சொல்லும் செய்தி மன்னர்களின் சிறப்பு, நாட்டு வளம், உத்தி என்னும் மூன்று நிலையில் பொதுவாக அமைந்துள்ளது.

முடத்தாமக்கண்ணியார் திருமாவளவன் மீது ஆற்றுப்படை பாடியுள்ளார். அதில் வழி வருணனைக்குப் பதிலாக நாட்டுவளம் மட்டும் கூறப்பட்டுள்ளது.

மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை, பொருநராற்றுப்படை ஆகியன நாட்டுவளமாகக் கூறும் செய்தி பெரும்பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படையில் வழி வருணனையாகக் கூறப்பட்டுள்ளது.

நாட்டுவளம் பற்றிய செய்தி வலிந்து சொல்லப்பட்ட ஒன்றாக உள்ளது.- வழி வருணனை புவியியல் அமைப்பில் உள்ளது போல் அமைந்துள்ளது. இவ்வாறு பல இடர்ப்பாடுகளும், கருத்து முரண்பாடுகளும் இப்பாடல்களில் இடம்பெற்றிருப்பது பல ஐயங்களை ஏற்படுத்துகிறது. ஏன் இந்த முரண்பாடு இதன் பின்புலம் என்ன? என்பது போன்றவற்றிற்கு விளக்கம் அறியவேண்டியுள்ளது.

### ***எட்டுத்தொகையிலுள்ள ஆற்றுப்படைப் பாடல்கள்***

*எட்டுத்தொகையிலுள்ள புறநானூற்றில் 48, 49, 64, 67, 68, 69, 70, 103, 105, 133, 138, 141, 155 ஆகிய 13 பாடல்களும், பதிற்றுப்பத்தில் உள்ள 40, 49, 57, 60, 67, 78, 87 ஆகிய 7 பாடல்களும் ஆற்றுப்படைப் பாடல்களாக உள்ளன. புறநானூற்றில் பாணாற்றுப்படை (5), விறலியாற்றுப்படை (4), (புலவராற்றுப்படை (2) என்றும், பதிற்றுப்பத்தில் பாணாற்றுப்படை (1) விறலியாற்றுப்படை (6) என்றும், உள்ள இப்பாடல்கள் பாடாண் திணையில் அமைந்த ஒரு துறையில் சேர்க்கப்பட்டுள்ளன.*

*பதிற்றுப்பத்து மற்றும் புறநானூற்றில் விறலியை ஆற்றுப்படுத்தும் விறலியாற்றுப்படையும் பாணரை ஆற்றுப்படுத்தும் பாணாற்றுப்படையும் புலவரை ஆற்றுப்படுத்தும் புலவராற்றுப்படையும் (புறநானூற்றில் மட்டும்) உள்ளன. ஆனால், கூத்தரை ஆற்றுப்படுத்தும் கூத்தராற்றுப்படையும் பொருநரை ஆற்றுப்படுத்தும் பொருநராற்றுப்படையும் இவ்விரு நூல்களில் இல்லை.*

*புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய இரு நூல்களிலுள்ள ஆற்றுப்படைப் பாடல்களில் இடம் பெற்றுள்ள மொத்த பொருட் கூறுகள் ஆறு. அவை, 1.விளி, 2.விறலி வருணனை, 3.யாழ் வருணனை, 4.ஆற்றுப்படுத்துதல், 5.அரசனின் சிறப்பு, 6.அரசன் நல்கும் பரிசில், 7.இரவலன் பெற்று வந்த பரிசில்[11] ஆகியனவாகும்.*

*இப்பொருட்கூறுகள் ஏழும் புறநானூறு மற்றும் பதிற்றுப்பத்திலுள்ள அனைத்து ஆற்றுப்படைப் பாடல்களிலும் அமைந்து இருக்கவில்லை. இது இப்பாடல்களுக்கு இடையே உள்ள முரண்பாட்டினையே காட்டுவதாக அமைகிறது. இருப்பினும் இப்பாடல்களில் இடம்பெற்றுள்ள இக்கூறுகள் கூறும் முறையில் ஒரே தன்மையில் அமைந்துள்ளன.*

*பதிற்றுப்பத்து 49, 60 ஆகிய இருபாடல்களிலும் ஆற்றுப்படுத்துவோன் 'நாமும் போவோம்' என்று தானும் உடன் வருவதாகக் கூறுகின்றான். இது பிற*

ஆற்றுப்படைப் பாடல்களில் இல்லாத ஒன்றாகும்.

விளி -ஆற்றுப்படுத்துபவன் - ஆற்றுப்படுத்தப்படுவன்- ஆற்றுப்படுத்தப்படும் பொருள் என்ற அமைப்பை இப்பாடல்களிலுள்ள பாணாற்றுப்படைப் பாடல்கள் மட்டுமே பெற்றுள்ளன.

புறம் 67 ஆவது பாடல் 'அன்னமே! குமரிக்கும் இமயத்திற்கும் இடையிலுள்ள சோழநாட்டின் உறையூரில் தங்கினால் பிசிராந்தை என்ற பெயரைக் கூறு. அப்படிச் செய்தால் ஏராளமான செல்வத்தை நீ பெறுவாய்' என்று அமைந்துள்ளது. இப்பாடலை ஆற்றுப்படை என்று கொள்ளலாமா? சிந்திக்கவேண்டிய ஒன்று.

**சிந்திக்க வேண்டியவை**

மேற்கண்ட விளக்கங்களை அலசுகின்ற போது பின்வரும் சிந்தனைகள் தோன்றுகின்றன. பாரி, ஓரி, அதிகன் முதலான கடையேழுவள்ளல்கள் மீது ஆற்றுப்படைப் பாடல்கள் ஒன்றும் பாடப்படவில்லை.

சேரமான் கோக்கோதை, சேரலாதன், கடல் பிறக்கு ஓட்டிய செங்குட்டுவன், செல்வக் கடுங்கோ வாழியாதன், பெருஞ்சேரல் இரும்பொறை, இளஞ்சேரல் இரும்பொறை, கோப்பெருஞ்சோழன், நலங்கிள்ளி, கிள்ளிவளவன், பாண்டியன் பல்யாக சாலை முதுகுடுமி, அதியமான் நெடுமான் அஞ்சி, வேள் ஆய், வையாவிக் கோப்பெரும் பேகன், நாஞ்சில் வள்ளுவன், கொண்கானங்கிழான் ஆகிய சேர, சோழ, பாண்டியர் மற்றும் புகழ் பெற்ற வள்ளல்கள், குறு நில மன்னர்கள் மீது பாடப்பட்டுள்ள எட்டுத் தொகைப்பாடல்களில் வழி வருணனை பற்றிக் கூறப்படவில்லை.

சங்கப்பாடல்களைப் பாடிய பெரும் புலவர்களான பரணர், கபிலர், அரிசில் கிழார், ஔவையார், முடமோசியார், மருதன் இளநாகனார், கோவூர்கிழார், பிசிராந்தையார் முதலான பெரும் புலவர்கள் இத்தகைய முயற்சியை மேற்கொள்ளாதது வியப்பாக உள்ளது.

அரிசில் கிழார் விறலியாற்றுப்படை பாடிய பெருஞ்சேரல் இரும் பொறை தகடூர் அழித்த பெருமைக்கு உரியவன் என்பதும் தகடூர் யாத்திரை என்ற பாடல் நமக்கு கிடைக்காமல் போனதும் இவ்வாறான பாடல்கள் ஒருவேளை பாடப்பட்டிருக்கலாமோ? என்ற ஐயத்தையும் முன்வைக்கத் தவறவில்லை.

என்றாலும் கிடைத்துள்ள பாடல்களில் உள்ள செய்திகளை வைத்துப் பார்க்கும் போது ஆற்றுப்படையின் வழி வருணனை

அகத்தினுள் நின்று செயல்பட நினைக்கும் பட்டினப் பாலை, புதிய முயற்சியை மேற்கொள்ள முயலும் மதுரைக்காஞ்சி ஆகியவற்றிலிருந்து விலகி நிற்கும் ஒன்றாக உள்ளதை அறியமுடிகிறது.

**பயன்பட்ட நூல்கள்**


1. சந்திரன், ஆ., பாட்டும் சிலம்பும், செம்புலம், சென்னை. 2013.
2. வையாபுரிப்பிள்ளை, எஸ்., இலக்கியச் சிந்தனைகள், வையாபுரிப்பிள்ளை நூற்களஞ்சியம், (முதல் தொகுதி) முதல் பதிப்பு, நூற்றாண்டு நினைவு வெளியீடு, 1989, ப.140.
3. *Nilakanta Sastri, KA., The Culture and History of the Tamils, Calcutta, 1964.*
4. கைலாசபதி, க., தமிழ் வீரநிலைக் கவிதைகள், குமரன் புத்தக இல்லம், சென்னை, 2006, ப.50.
5. இராசமாணிக்கனார் மா., பத்துப்பாட்டு ஆராய்ச்சியுரை, சென்னைப் பல்கலைக்கழகம், 1970, முன்னுரை.ப. VIII
6. சிவத்தம்பி, கா., பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் நாடகம், குமரன் புத்தக இல்லம், சென்னை, 2005, ப.78.
7. சந்திரன், ஆ., பாட்டும் சிலம்பும், செம்புலம், சென்னை 2013.
8. சந்திரன், ஆ., பத்துப்பாட்டு அமைப்புமுறை, உலகத் தமிழாராச்சி, தரமணி, சென்னை, 2016.
9. சிவத்தம்பி,கா., தெல்காப்பியமும் கவிதையியலும், குமரன் புத்தக இல்லம், சென்னை, 2007, பக்.25-27.
10. மேலது., ப.26
11. சந்திரன், ஆ., பத்துப்பாட்டு அமைப்புமுறை, உலகத் தமிழாராய்ச்சி, தரமணி, சென்னை, 2016.